

துணை முதல்வராகி முதன்முதலாக விருதுநகர் மாவட்டம் வருகை தரும் துணை முதலமைச்சர் அவர்களை வடக்கு – தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக சிறப்பான வரவேற்பு கொடுத்தனர்.

### மதுரை தெற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள்!

## மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன்-கழகத்தினருக்கு வேண்டுகோள்

மதுரை, அக்.2-

மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சேடப்பட்டி மு. மணிமாறன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.24 அன்று வெளியிட உள்ளது. 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களை சேர்த்தல், பெயர்கள் நீக்குதல், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளது.

இது தவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நிர்ணயிக்கப் பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை சிறப்பு முகாம்களும் நடத்தப்பட உள்ளன. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும். இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடி பெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், இறந்த வாக்காளர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கேட்டுக் கொள்ளப்படுகிறது

மேலும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் நாட்கள் 29.10.2024 பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களாகும், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025 ஆகும்.

மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ள நாட்களிலும் மதுரை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், ஊராட்சி செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி, பிரதிநிதிகள் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஒன்றிணைந்து வாக்காளர் பட்டியலில் பெயர்சேர்க்க, விண்ணப்பித்தல், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மற்றும் ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறும்,

இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்ட கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் கழகத்தினரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தென்காசி வடக்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி.அக்.2-

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர்ஈ.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:



முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.2024 வெளியிட உள்ளது.29.10 .2024 முதல் 28.11.2024 வரை பெயர்கள் நீக்குதல், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டு ள்ளது.

இது தவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நிர்ணயிக்கப் பட்ட வாக்கு சாவடி மையங்களில் காலை 9:30 மணி முதல் மாலை 530 மணி வரை சிறப்பு முகாம்களும் நடத்தப்பட உள்ளன. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும்,01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க,நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தந்த படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்.இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1 ம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும்,வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும்,புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும்,இறந்த வாக்காளர்களின் பெயர்களை தற்போது உள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் நாட்கள் 29.10.2024. பெயர்களை சேர்க்க,நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11 .2024 சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி,ஞாயிறு நாட்கள் ஆகும்.இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025 ஆகும்.

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும்,சிறப்பு முகாம்கள் நடைபெறஉள்ளநாட்களிலும் தென்காசி வடக்கு மாவட்டத்தை சேர்ந்த நிர்வாகிகள்,இப்பணிகள் குறித்து மேற்கண்ட நடவடிக்கைகளை மாவட்ட கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் பதவியேற்பு!

# மதுரை செய்தியாளர்கள் சங்கம் சார்பில் வாழ்த்துகள்!

## எஸ்.கதிரவன்- எஸ்.ரமேஷ்பாண்டியன் - கே.சுப்பிரமணியன் அறிக்கை!

மதுரை, அக்.2-

மதுரை செய்தியாளர்கள் சங்க தலைவர் எஸ். கதிரவன், செயலாளர் எஸ். ர மே ஷ் பா ண் டி ய ன் , பொருளாளார் கே. சுப்பிரமணியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கைவருமாறு:

தமிழ்நாட்டின் பெருமைக்குரிய துணை முதலமைச்சர் பொறுப்பிற்கு தாங்கள் முதலமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்டு இருப்பது கட்சியின் சார்பில் மிகப்பெரிய மகிழ்ச்சி அளிக்கிறது. பவளவிழா காணும்

வெற்றியை பெற்று தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறையில் தனித்த முத்திரை பதித்து வரும் தங்களுக்கு துணை முதல்வர் பதவி நிச்சயம் புதிய மைல் கல்லாக இருக்கும் என பாரம்பரியமிக்க மதுரை செய்தியாளர்கள் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்குகிறோம். எங்களது சங்கம் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வாழ்வில் ஒளி ஏற்றுகிற வகையில் தொடங்கப்பட்டு பத்திரிகையாளர்களின் எங்களது சங்க கட்டடத்தை அமைத்து தந்ததோடு, அதை 1999ல் நேரில் வந்து திறந்து வைத்து அந்தப் பகுதிக்கு பிரஸ் காலனி என பெயர் சூட்டி அழகி பார்த்தவர் கலைஞர் அதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப் பேற்று சிறப்பான செயல்பாட்டை அனைத்து தரப்பு மக்களுக்கும் அளித்து பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருவதோடு சங்கத்தின் சார்பில் கொடுக்கும் பல்வேறு கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து வருகிறார்கள். அந்த வரிசையில் மிக முக்கிய பொறுப்பிற்கு வந்துள்ள தங்களின் கவனத்திற்கு எங்களது சங்கத்தின் முக்கிய கோரிக்கைகளை கொண்டு வரும்போது அதனை தாங்களும் பரிசீலித்து நிறைவேற்றி தந்திட வேண்டுமாய் இந்த மகிழ்ச்சிகரமான நேரத்தில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் கழக பவள விழா மற்றும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் 3 ஆண்டு ஆட்சியின் சாதனை விளக்கப் மாபெரும் பொதுக்கூட்டம் கூடங்குளம் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில் ரோகினி மைதானத்தில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி தலைமையில் நடைபெற்றது.மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், கிரகாம்பெல், சித்திக்,ஜெகதீஸ், தங்கபாண்டியன், மைக்கேல், நம்பி,மல்லிகா அருள், ஜான்சு ரூபா,வின்சி மணியரசு,உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

# மாமதுரை வரலாற்றில் தடம் பதித்தார்!



தமிழ்நாட்டின் துணை முதல்வராக முதல்வரால் நியமிக்கப்பட்ட மாநில இளைஞரணி செயலாளர், விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற மறுநாள் மாலை 30.09.2024ஆம் தேதி விமானம் மூலம் மதுரை விமான நிலையம் வந்து சேர்ந்தார்கள். துணை முதல்வராக நியமிக்கப்பட்ட மறுநாள் தென் தமிழகத்தின் தலைநகராகக் கருதப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்கதும், ஐரோப்பியர்களால் தென்கிழக்கு ஆசியாவின் "ஏதென்ஸ்" என்று பாராட்டி வரலாற்றில் பதிவு செய்யப்பட்டதும், சங்கம் வைத்து மொழி வளர்த்த நான்மாடல் கூடல்மாநகராம் மதுரை மாநகருக்கு முதல் அரசுமுறை வெளியூர்ப் பயணமாக இரவு 8 மணியளவில் விமானம் மூலம் மதுரை வந்து சேர்ந்தார்கள்.


தமிழ்நாடு துணை முதல்வராக நியமிக்கப்பட்டு, அவர் முதல் அரசுமுறைப் பயணமாக மாமதுரை வந்து சேர்ந்த கால இடைவெளி மிகக் குறைவு என்றாலும், செய்தியறிந்த தென் தமிழ்நாட்டில் உள்ள கழக நிர்வாகிகளும், உள்ளாட்சி நிர்வாகிகளும், அமைச்சர்களும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் விமான நிலைய வளாகத்தில் வந்து சேர்ந்தது மட்டுமல்ல, பல்லாயிரக் கணக்கான கழகச் செயல் வீரர்களும், வீராங்கனைகளும், இளைஞர்களும் கையில் கழகக் கொடிகளுடன் கூடிவிட்டனர். விமான நிலையத்தைச் சுற்றிலும் மின்னல் வெளிச்சம் பாய்வதைப் போல மின்விளக்குகளுக்கிடையே கருப்பு சிகப்பு கொடிகளின் அசைவும், கழக செயல்வீரர்களின் முழக்கங்களன "இளைஞரணி செயலாளர் வாழ்க" - "தமிழ்நாட்டின் துணை முதல்வர் வாழ்க" என்ற முழக்கங்கள், மின்னல் ஒளி வீச்சிற்கு இடை அதிரும் இடி முழக்கங்கள் போல மதுரை விமான நிலையம்அற்புதமாய் காட்சியளித்தது. கழகச் செயல் வீரர்கள் குறிப்பாக இளைஞர்களின் ஆர்வமும், தொடர் லட்சிய முழக்கங்களும், கழகத்திற்கு புதிய தெம்பினையும், வலிமையையும் குன்றிலிட்ட விளக்காய் தெளிவு படுத்தியது! அது மட்டுமல்ல "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்ற மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரனார் அவர்களின் வைர வரிகளை நினைவூட்டியது என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல!

ஒன்றுபட்ட மதுரை மாவட்டக் கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளராக சற்றேறக்குறைய 25 ஆண்டுகாலம் பணியாற்றிய காலகட்டத்திலும், அதற்கு முன்னரும், பேரறிஞர் அண்ணாவிற்கு மதுரை மாவட்டக் கழகம் வழங்கிய வரவேற்பை கண்டுகளித்திருக்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞருக்கும், திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முதல்வர் தளபதியார் அவர்களுக்கும் நானே மாவட்டக் கழகச் செயலாளர் என்ற முறையில் வரவேற்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருக்கிறேன். அதுமட்டுமல்ல, மதுரை மாவட்டத்திற்கே தனிச்சிறப்பை உருவாக்கும் "ரயிலடி வரவேற்புக்களை" ஏற்பாடு செய்திருக்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மதுரை மாவட்டத்திற்கு வருவதற்கு பெரிதும் ஆர்வம் காட்டுவார்கள், அதுமட்டுமல்ல செயல் வீரர்களின் கடல் அலை போன்ற ஆர்வப் பெருக்கினைக் கண்டு பெருமகிழ்வு கொள்வார்.

இந்தக் கடந்த கால நிகழ்வுகளை நினைவுபடுத்துவதற்கு காரணம் கழகத்தின் இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் அவர்கள் 30.09.2024 ஆம் நாள் இரவு 8 மணிக்கு விமான மூலம் வந்தடைந்த காலகட்டத்தில், கழகச் செயல் வீரர்களும், இளைஞர்களும், பொதுமக்களும் வழங்கிய வரவேற்பும் முழக்கங்களும், கடந்தகால வரவேற்பு நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தியதோடு, அந்த நிகழ்ச்சிகளோடு ஒப்பிடத்தக்க வகையில் ஆர்வமும், எழுச்சியும் கொந்தளிக்கும் கடல் அலைபோல் பொங்கி எழுந்தன. அதுமட்டுமல்ல துணை முதல்வர் தங்குமிடம் சென்றடையும் மட்டும் இந்த எழுச்சியும், ஆர்வமும் குன்றாமல் குறையாமல் ஓயாத கடல் அலைபோல் தொடர்ந்தன. மாமதுரையில் கொந்தளிக்கும் கடலலைபோல் போல் உருவான எழுச்சியும், ஆர்வமும் தமிழ்நாடு முழுமையும் நிச்சயம் இருக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. காரணம், திராவிட மாடல் ஆட்சியின் தாக்கம் தமிழ்நாடு முழுமையும் மக்கள் மத்தியில் வாழ்வுடன் கலந்திருக்கிறது. இங்குமட்டுமல்ல, திராவிட மாடல் ஆட்சியின் தாக்கம் இந்திய ஒன்றியப் பகுதி முழுமையும் தாக்கத்தை தொடர்ந்தும், பரந்தும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதே இன்றைய நிலை.

துணை முதல்வர் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை விரைந்து நிறைவேற்ற வேண்டிய தலையாயக் கடமை என்ற புரிதலோடும், அடக்கத்தோடும் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்கள். அந்த அறிக்கையில் தெரிவிக்கிறார், உங்களுக்கு பணி செய்ய, முதல்வர் என்னை துணை முதல்வராக்கியுள்ளார். எனவே, எனக்கு வாழ்த்து சொல்ல யாரும் சென்னைக்கு வரும் சிரமத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம், மாறாக நானே உங்கள் வாழும் இடம்தேடிவந்து சந்திக்கிறேன் என்ற இந்த அறிக்கையின் வாசகங்கள் பேரறிஞர் அண்ணா தன்னுடைய தம்பி மார்களுக்கு, அவர் வாழ்ந்த கால கட்டத்தில் விடுத்த வேண்டுகோளை அப்படியே செயல்படுத்த முயற்சிக்கிறார் என்றுதான் கருத முடிகிறது.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



பேரறிஞர் அண்ணா அன்று ஆங்கிலத்தில் கூறிய வாசகங்கள் (Go to the people live with them, learn their language and plan with them) தமிழ்நாடு துணை முதல்வர் தனது அறிக்கையில், "என்னைக் காண யாரும் என்னை நோக்கி வர வேண்டாம், உங்களைக்காண உங்கள் வாழ்விடம் நோக்கி நான் வருகிறேன்" என்ற வாசகங்கள் பேரறிஞர் அண்ணாவின் மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு வடிவம் கொடுத்து வண்ணம் தீட்டியதாகவே கருதமுடிகிறது.

தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த பொறுப்பிற்கு வருவதற்கு முன்னர், பல்வேறு பயிற்சிகளை மேற்கொண்டார் என்பதை சில முச்சந்தியிலேயிருந்து சிந்துபாடும் "அரசியல் சிறுவியாபாரிகள்" இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கலைத் துறையிலே கால் பதித்து, வெற்றிப் படங்களை உருவாக்கி, மக்களின் மனங்களைக் கவர்ந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்று, இயக்கத்தில் அடுத்த தலைமுறைக்கான அடித்தளம் அமைத்தார். எதிர்கால இளைஞர்கள் பகுத்தறிவு சிந்தனையில் பன்பட்டவர்களாக இருந்திட வேண்டும் என்பதற்காக மதமாச்சரியங்களுக்கு வழிவகுக்கும் சனாதனக் கோட்பாட்டை ஆரம்பக் கட்டத்திலேயே காரண, காரிய விளக்கங்களோடும் மற்றும் ஆதாரங்களோடும் எதிர்த்து உரையாற்றினார்.

இவருடைய பகுத்தறிவு புரட்சியைக் கண்டு ஆங்காங்கு பரவியிருக்கும் மதவெறிக் கும்பல் வழக்குகளை நீதிமன்றத்தில் தொடுத்தனர். ஆனால், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இந்த அச்சுறுத்த வர்களுக்கு எல்லாம் கிஞ்சிற்றும் கவலைப்படாமல் தன்னுடைய பகுத்தறிவு சிந்தனைகள் இளை ஞர்களது உள்ளத்திலே பதிய வேண்டும் என்பதற்காக உரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

பின்னர், தமிழ்நாடு அமைச்சரவையில் விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டு துறைக்கு பொறுப்பேற்றுக் கொண்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உலக விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாட்டு இளைஞர்களை, விளையாட்டு வீரர்களாக பங்கேற்று, வெற்றி பெறுவதற்கான முன்முயற்சிகளையும் மேற்கொண்டார்.

தமிழ்நாடு சார்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர், சிலரின் உலகளாவிய வெற்றிக்கு இவர் மேற்கொண்ட முன்முயற்சிகள்தான் காரணம் என்பதை யாராலும் மறுக்க வியலாது. தனக்கு வழங்கப்பட்ட தேர்தல் காலப் பிரச்சாரப் பொறுப்புகளையும் புதிய, புதிய யுக்திகளைக் கையாண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மகத்தான வெற்றிக்கு கணிசமான பங்கினை வழங்கினார். இதன் மூலம் மக்களின் அன்பினையும், கழகத் தலைவர்களின் பேராதரவையும் பெற்றதோடு, எதிர்க்கட்சிகள் எதிர்கொள்ள முடியாத சவாலாகவே தமிழ்நாடு அரசியல் அரங்கத்தில் உருவானார் என்பதை அனைவரும் அறிவோம். இத்தகைய பின்புலத்துடன் தான் இன்றைய காலகட்டத்தில் கால தேசவர்த்தமானங்களை கணக்கில் எடுத்துக்கொண்ட தமிழ்நாட்டின் முதல்வர் தளபதியார் அவர்கள், உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக எதிர்காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நியமித்துள்ளார்கள்.

இனிவரும் காலங்களில் மதவாத சக்திகளைஎதிர்த்து அரசியல் களம்காண வேண்டிய அரசியல் நிர்பந்தங்கள் உருவாகலாம். அவற்றையெல்லாம் தடுத்து, தகர்த்திட வேண்டுமென்கின்ற தொலைநோக்கு சிந்தனையோடு திராவிட முன்னேற்றக் கழக இளைஞர்களை திராவிட சித்தாந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் தயார் செய்யும் பெரும் பணியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் வெற்றி பெறுவார். தமிழ்நாடு முதல்வருக்கும், திராவிட மாடல் ஆட்சிக்கும், பெரும் புகழைத் தேடித் தருவார் என்ற பெருத்த நம்பிக்கையுடன், மதுரை மாநகரத்து மக்கள் சார்பாக வாழ்த்துகிறோம்.

மாமதுரையில் சிலை வடிவில் தாங்கள் ஏற்றுக்கொண்ட கோட்பாட்டின் உயிரோட்டமாக காட்சி தரும்., தந்தை பெரியார், பாபா சாகிப் அம்பேத்கார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய அனைவரும் தங்களை வாழ்த்துகிறார்கள்.

இந்த சரித்திர நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை முன்னின்று கவனித்த தொடர்புடைய அமைச்சர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும் நன்றி, வணக்கம்.